FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

~~(குற்ற வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~ Under Section 173 BNSS

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8120312

1. District : திண்டுக்கல் மாவட்டம் PS: காவல்நிலையம் Year: 2026 ஆண்டு FIR No.: 04/26 மு.த.அ. எண் Date: 10.06.2026 நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018. Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : 09.06.26 at 11.25 hrs நாள் வரை 10.06.26 at 10.30 hrs

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : 10.06.26 at 17.00 hrs நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம்

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 35 KM தெற்கு திசை

குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : பரிசோதனை அலுவலகம், செந்துறை முகவரி மற்றும், நத்தம் தாலுகா அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : M. அடிவேல் குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ Husband's Name : தி.மருதன் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : இந்தியன் நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : கூலித் தொழில் விவசாயம் (g) Address : திருநகர், மொடக்கம்பட்டி, செந்துறை முகவரி அரசு, நத்தம் தாலுகா, திண்டுக்கல்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) தி.ஜெகதீ, பரிசோதனையாளர், செந்துறை பரிசோதனை, நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

---

9. • Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

10.6.26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

10/06/26

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் எஸ். ஜெயகிருஷ்ணன்,
Rank: நிலை .....No. எண் .....
காவல் ஆய்வாளர்,
உ.நி.க. பாபு,
தென்காசி.

திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
கு.எண்:4/2026 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:–
Column No.12, FIR Contents

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 10/06/2026–ம் தேதி மாலை 06.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது திண்டுக்கல், நத்தம் தாலுகா, செந்துறை அஞ்சல், போடிக்கம்பட்டி, இந்திரா நகரைச் சேர்ந்த திரு.மருதன் மகன் திரு. M.அழகுவேல் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று 10.06.2026–ம் தேதி இரவு 07.00 மணிக்கு கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர், M.அழகுவேல், த/பெ.மருதன், இந்திரா நகர், போடிக்கம்பட்டி, செந்துறை அஞ்சல், நத்தம் தாலுகா, திண்டுக்கல். பெறுநர், உயர்திரு. DSP அய்யா அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திண்டுக்கல். அய்யா, நான் மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி தாலுகா, தாண்டவன் குளம், எல்லைச் சந்து, அண்ணா நகரில் வசித்து வருகின்றேன். நான் கவரிங் நகைகள் வாங்கி விற்கும் தொழில் செய்து வருகின்றேன். எனது சொந்த ஊர் திண்டுக்கல் மாவட்டம், நத்தம் தாலுகா, போடிக்கம்பட்டி ஆகும். கடந்த 14.05.2026–ம் தேதி எனது உறவினரான நல்லுச்சாமியிடமிருந்து நத்தம் ஊராட்சி ஒன்றிய எல்கைக்குட்பட்ட செந்துறை கிராமம் ரீசர்வே எண். 91/1–ல் உள்ள 2 செண்ட் புஞ்சை நிலத்தினை செந்துறை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 692/2026–ன் படி ரூ.52,000/–க்கு கிரையமாக எனது மனைவி திருமதி.செபஸ்டின் கலைவாணி பெயரில் வாங்கினேன். அன்றைய தினம் எனது அலைபேசி எண்.97875 12267–ல் நான் பதிவு செய்த பத்திரம் திரும்ப பெறுவதற்கு தயார் நிலையில் உள்ளது என்றும், அதற்கான பட்டா மாறுதல் விண்ணப்பம் எண். 2026/0105/13/018220 நத்தம் தாலுகா அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் குறுஞ்செய்தி வந்தது. அதன் பின்பு நேற்று 09.06.2026–ம் தேதி காலை சுமார் 11.25 மணிக்கு செந்துறை சர்வேயர் திரு.ஷெரிப் அவர்கள் அவருடைய அலைபேசி

எண். 96983 34115-லிருந்து எனது அலைபேசி எண். 97875 12267-க்கு தொடர்பு கொண்டு, பத்திரப் பதிவு அலுவலகத்திலிருந்து பட்டா மாறுதல் விண்ணப்பம் அவருக்கு வரப்பெற்றுள்ளது என்றும், பதிவு செய்த இடத்தினை நேரில் வந்து காண்பிக்குமாறும் கூறினார். நான் வெளியில் உள்ளதாகவும், எனது அக்கா மற்றும் அப்பா ஆகியோர் இடத்தினை காண்பிப்பார்கள் என்றும் கூறினேன். பின்பு அவர் காலை சுமார் 12.00 மணிக்கு நேரில் வந்துள்ளார். அப்போது எனது அக்கா திருமதி.வள்ளி மற்றும் அப்பா ஆகியோர் மேற்படி எனது மனைவி பெயரில் கிரையம் பெற்ற இடத்தினை சர்வேயரிடம் காண்பித்துள்ளார்கள். சர்வேயர் இடத்தினை அளவீடு செய்துவிட்டு என்னிடம் பேசிக்கொள்வதாக எனது அப்பாவிடம் கூறிவிட்டு சென்று விட்டதாக எனது அப்பா என்னிடம் கூறினார். பின்பு மதியம் 12.30 மணிக்கு சர்வேயர் எனது அலைபேசியில் தொடர்பு கொண்டு, இடத்தினை பார்வையிட்டு அளவீடு செய்துவிட்டதாகவும், எனது மனைவி பெயரில் பட்டா மாறுதல் செய்ய வேண்டுமென்றால் ரூ.8,000/-ம் அவருக்கு செலவுக்கு கொடுக்க வேண்டும் என்றும் கூறினார். நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று கூறினேன். அதற்கு அவர் எனக்கு மேல் உள்ள அதிகாரிகளிடம் நான் போய் சார் சார் என்று நிக்க முடியாது என்றும் உங்கள் மனைவி பெயரில் பட்டா பெறுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றால் நான் கேட்டபடி பணம் கொடுக்க வேண்டும் என்றும் கூறினார். நான் நாளை நேரில் வந்து பார்க்கிறேன் என்று கூறினேன். இன்று 10.06.2026-ம் தேதி காலை சுமார் 10.30 மணிக்கு நத்தம் தாலுகா அலுவலகத்தில் முதல் தளத்தில் உள்ள செந்துறை பிர்கா சர்வேயர் அலுவலகத்திற்கு சென்று சர்வேயர் திரு.ஷெரிப் அவர்களை சந்தித்து பட்டா மாறுதல் சம்மந்தமாக கேட்டேன். அதற்கு அவர் நான் கேட்டபடி பணம் ரூ.8,000/-ம் கொண்டு வந்துள்ளீர்களா என்று கேட்டார். தற்போது என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும் ஏதாவது குறைத்துக்கொள்ளும்படியும் கேட்டேன். அதற்கு அவர் ரூ.3,000/-த்தை குறைத்துக்கொண்டு, ரூ.5,000/-ம் கொடுங்கள் என்று கறாராக கூறினார். மேலும் எனது மனைவி பெயரில் உள்ள பத்திரத்தின்

ஜெராக்ஸை எடுத்து வந்து கொடுக்கச் சொன்னார். நானும் அவர் கூறியது போல ஜெராக்ஸ் எடுத்து அலுவலகத்தில் கொடுத்தேன். அப்போது அலுவலகத்தில் சர்வேயர் இல்லாததால், அங்கிருந்த உதவியாளரிடம் கொடுத்தேன். பின்பு மாலை சுமார் 05.00 மணிக்கு சர்வேயர் திரு.ஷெரிப் என்னை அலைபேசியில் தொடர்பு கொண்டு ஏன் பணம் கொண்டு வரவில்லை என்று கேட்டார். அதற்கு நான் அலுவலகத்தில் நீங்கள் இல்லை என்பதால் திரும்பி வந்துவிட்டதாக கூறினேன். அதற்கு அவர் நாளை 11.06.2026–ம் தேதி காலை நான் கேட்ட பணம் ரூ.5,000/–த்தை எனது அலுவலகத்தில் கொண்டு வந்து கொடுத்துவிடுங்கள் எனவும், இன்று இரவே பட்டா மாறுதல் விண்ணப்பத்திற்கு ஒப்புதல் அளித்து விடுவதாகவும் கூறினார். பின்பு நான் யோசனை செய்ததில் பட்டா மாறுதலுக்காக சர்வேயருக்கு லஞ்சம் கொடுத்து வாங்குவதற்கு எனக்கு விருப்பம் இல்லை. எனவே என்னிடம் ரூ.5,000/–ம் லஞ்சமாக கேட்ட செந்துறை பிர்கா சர்வேயர் திரு.ஷெரிப் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த புகாருடன் எனது மனைவி பெயரில் பதிவு செய்யப்பட்ட செந்துறை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 692/2026 நாள். 14.05.2026–ன் நகலினை இணைத்துள்ளேன். மேலும் சர்வேயர் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.5,000/–ம் கொண்டு வந்துள்ளேன். நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd/– xxxxx (M.Alaguvel, 10.06.2026)

Sir, Received the complaint on 10.06.2026 at 18.00 Hrs. A confidential verification has been conducted in respect of the complaint through sources. Complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, I am registering a case in Dindigul V&AC Cr.No.04/2026, u/s. 7(a) of P.C Act 1988, as amended by the PC (Amendment) Act 2018, on 10.06.2026 at 19.00 hrs and took up investigation. Sd/–xxxxx (J.Rupa Geetharani, Inspector of Police, V&AC, Dindigul 10.06.2026)

Original FIR along with written complaint of Tr.M.Alaghuvel, S/o.Tr.Maruthan, Indira Nagar, Bodikampatti, Senthurai Post, Natham Taluk, Dindigul District and with the relevant documents are submitted to the Principal District Judge, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

JRupa 10/06/26

(J.Rupa Geetharani),
Inspector of Police,
V&AC,
Dindigul